

தருமபுரி மாவட்டம், வள்ளல் அதியமான் கோட்ட வளாகத்தில் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறும்பான்மையினர் நலத்துறையின் சார்பில் பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகளை வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் மற்றும் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் செஞ்சி கே.எஸ்.மஸ்தான் ஆகியோர் நேற்று முன்தினம் (05.03.2024) வழங்கினார்கள். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.கி.சாந்தி, தருமபுரி நாடாளுமன்ற உறுப்பினர் மரு.டி.என்.வி.எஸ்.செந்தில்குமார், தருமபுரி சட்ட மன்ற உறுப்பினர் எஸ்.பி.வெங்கடேஸ்வரன் முன்னாள் அமைச்சர் முனைவர். பழனியப்பன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் தடங்கம் பெ.சுப்பிரமணி, கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) கௌரவ் குமார், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை செயற்பொறியாளர் பாலகிருஷ்ணன், வட்டார வளர்ச்சி அலுவலர் சுருளிநாதன் உட்பட துறைசார் அலுவலர்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

### தருமபுரி மாவட்டம் - பாலக்கோடு - நல்லம்பள்ளி வட்டங்களில்

# இலங்கைத் தமிழர் முகாம்வாழ் பயனாளிகளுக்கு 168 வீடுகள்!

### அமைச்சர்கள் எம்.ஆர்.கே. பன்னீர் செல்வம் - செஞ்சி மஸ்தான் திறந்து வைத்தனர்!

தருமபுரி,மார்ச்.7-

தருமபுரி மாவட்டம், பாலக்கோடு வட்டம், கெசர்குளி அணை இலங்கை தமிழர் மறுவாழ்வு முகாமில் ரூ.4.00 கோடி மதிப்பீட்டில் 80 வீடுகள் மற்றும் நாகாவதி அணை இலங்கை தமிழர் முகாம் வாழ் பயனாளிகளுக்கான நல்லம்பள்ளி வட்டம், தொக்குபோதன அள்ளியில் ரூ.4.40 கோடி மதிப்பீட்டில் 88 வீடுகள் என மொத்தம் ரூ.8.40 கோடி மதிப்பீட்டில் 168 குடியிருப்புகளை வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் மற்றும் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் செஞ்சி கே.எஸ்.மஸ்தான் ஆகியோர் நேற்று முன்தினம் (05.03.2024) திறந்து வைத்தார்கள். இந்நிகழ்ச்சிக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.கி.சாந்தி முன்னிலை வகித்தார்கள்.

தருமபுரி மாவட்டம், தருமபுரி வட்டம், மதிகோன்பாளையம் ஒழுங்குமுறை விற்பனைக்கூட முகாம், நல்லம்பள்ளி வட்டம், தொப்பையாறு அணை முகாம், காரிமங்கலம் வட்டம், தும்பலஅள்ளி அணை முகாம், பாலக்கோடு வட்டம், கெசர்குளி அணை முகாம், சின்னாறு அணை முகாம், பென்னாகரம் வட்டம், நாகாவதி அணை முகாம், பாப்பிரெட்டிப்பட்டி வட்டம், வாணியாறு அணை முகாம், அரூர் வட்டம், அரூர் வேளாண்மை ஒழுங்குமுறை விற்பனைக்கூட முகாம் உள்ளிட்ட 8 இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாம்களில் 2,438 மக்கள் வசித்து வருகிறார்கள். தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் தருமபுரி மாவட்டம் பாலக்கோடு வட்டத்தில் சின்னார் அணை இலங்கை தமிழர்களது மறுவாழ்வு முகாமில் புதியதாக 50 வீடுகள் ரூ.2.51 கோடி மதிப்பில் கடந்த 17.9.2023 அன்று திறந்து வைக்கப்பட்டது.

தற்போது நாகாவதி அணை முகாமில் 88 குடியிருப்புகளும், கெசர்குளி அணை முகாமில் 80 குடியிருப்புகளும் என மொத்தம் ரூ.8.40 கோடி மதிப்பீட்டில் 168 குடியிருப்புகள் வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் மற்றும் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் செஞ்சி கே.எஸ்.மஸ்தான் ஆகியோரால் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

மேலும், இலங்கை தமிழர் மறுவாழ்வு முகாம் பொதுமக்களுக்கு வீடு சாவியினை வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் மற்றும் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் செஞ்சி கே.எஸ்.மஸ்தான் ஆகியோர் வழங்கினார்கள்.

இதனை தொடர்ந்து, தருமபுரி மாவட்டம், நல்லம்பள்ளி வட்டம், அதியமான் கோட்டை ஊராட்சியில் செய்தி மக்கள் தொடர்புத் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள வள்ளல் அதியமான் கோட்ட வளாகத்தில் மாவட்ட ஊராட்சி நிதியிலிருந்து ரூ.49.00 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள அதிநவீன நூலகத்தினை வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் மற்றும் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் செஞ்சி கே.எஸ்.மஸ்தான் ஆகியோர் திறந்து வைத்தார்கள். மேலும், 7 புதிய பேருந்து வழித்தடங்களில் பேருந்துகளை கொடியசைத்து துவக்கி வைத்தார்கள். வள்ளல் அதியமான் கோட்ட வளாகத்தில் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறும்பான்மையினர் நலத்துறையின் சார்பில் பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகளை வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் மற்றும் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் செஞ்சி கே.எஸ்.மஸ்தான் ஆகியோர் வழங்கினார்கள்.

முன்னதாக முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு, தருமபுரி அரசு கலைக்கல்லூரியில் நடைபெற்ற கலைஞர் நூற்றாண்டு மாவட்ட அளவிலான பரிசளிப்பு விழாவில் பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்ற 292 மாணவ, மாணவியர்கள் மற்றும் இளைஞர்களுக்கு ரூ.7.80 இலட்சம் மதிப்பீட்டில் பரிசுத்தொகை மற்றும் சான்றிதழ்களை வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் மற்றும் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் செஞ்சி கே.எஸ்.மஸ்தான் ஆகியோர் வழங்கினார்கள்.

மேலும், பாலக்கோடு பேரூராட்சியில் பல்வேறு வளர்ச்சி திட்டப்பணிகளை வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் மற்றும் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் செஞ்சி கே.எஸ்.மஸ்தான் ஆகியோர் துவக்கி வைத்தார்கள்

இந்நிகழ்ச்சியில் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் செஞ்சி கே.எஸ்.மஸ்தான் பேசியதாவது:

தமிழ்நாடு முதலமைச்சர் அனைத்து தரப்பு மக்களுக்கும் பல்வேறு திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி வருகின்றார்கள். குறிப்பாக இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாம் வாழ் மக்களுடைய வாழ்வாதாரத்திற்காகவும், நிரந்தர குடியிருப்புகளாக மாற்றி தர வேண்டும் என்ற நோக்கத்தோடு, முதல் கட்டமாக 3510 வீடுகளும், இரண்டாவது கட்டமாக 3959 வீடுகளும் கட்டித்தரப்படும் என அறிவித்தார்கள்.

தமிழ்நாடு முதலமைச்சர் நேரடியாகவே வேலூருக்கு வருகை தந்து, அடிக்கல் நாட்டி, ஓராண்டு காலத்தில் கட்டப்பட்ட வீடுகளை பொதுமக்களுடையே பயன்பாட்டிற்கு துவக்கி வைத்தார்கள்.

இதைப்போல, தமிழகத்திலுள்ள இலங்கை தமிழர் மறுவாழ்வு முகாம்களில் குடியிருப்புகள் கட்டப்பட்டு வரும் பணிகள் நடைபெற்று வருகிறது. இன்றைய தினம் பாலக்கோடு ஊராட்சி ஒன்றியம், கெசர்குளி அணை இலங்கை தமிழர் மறுவாழ்வு முகாமில் ரூ.4.00 கோடி மதிப்பீட்டில் 80 வீடுகள் மற்றும் நாகாவதி அணை இலங்கை தமிழர் முகாம் வாழ் பயனாளிகளுக்கான நல்லம்பள்ளி வட்டம், தொக்குபோதன அள்ளியில் ரூ.4.40 கோடி மதிப்பீட்டில் 88 வீடுகள் என மொத்தம் ரூ.8.40 கோடி மதிப்பீட்டில் 168 குடியிருப்புகள் கட்டி முடிக்கப்பட்டு, திறந்து வைக்கப்பட்டுள்ளது.

தருமபுரி மாவட்ட முகாம்களில் வீடு கட்டுகின்ற பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது. சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை மூலம் இலங்கை தமிழர் மறுவாழ்வு முகாம் பொதுமக்களுக்கு பணக்கொடை, விலையில்லா அரிசி, பாத்திரங்கள், துணிமணிகள், விலையில்லா சமையல் எரிவாயு உள்ளிட்ட நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டு வருகிறது. மேலும், முகாம் வாழ் குழந்தைகளின் கல்விக்காக கல்லூரிகளில் பொறியில் மற்றும் வேளாண்மை கல்லூரிகளில் முதற்கட்டமாக 50 இடங்களை ஒதுக்கீடு செய்து, அவர்களுக்கான அனைத்து கல்வி செலவுகளையம் அரசே ஏற்கிறது.

அதுமட்டுமல்லாமல் மகளிர் சுய உதவிக் குழுக்களை உருவாக்கி, மகளிர் உதவித் தொகைகளும் வழங்கப்பட்டு வருகிறது. படித்த இளைஞர்களுக்கு, திறன் மேம்பாடுகளை உருவாக்குவதற்காக பல்வேறு திறன் மேம்பாட்டு பயிற்சிகளும் வழங்கப்படுகிறது.

தமிழ்நாடு முதலமைச்சர் இலங்கை தமிழர் மறுவாழ்வு முகாம் வாழ் பொதுமக்கள் வாழ்வாதாரத்தை மேம்படுத்த எண்ணற்ற திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி வருகின்றார்கள். இம்முகாம் வாழ் பொதுமக்கள் தங்களுக்கு கட்டிகொடுக்கப்பட்டுள்ள வீடுகளை நல்ல முறையில் பராமரித்து, வாழ்வாதாரத்திலும், பொருளாதாரத்திலும் முன்னேற்றம் அடைய வேண்டும். மேலும், தங்களது குழந்தைகளுக்கு உயர் கல்வி வரையிலான கல்வியை அளித்து அவர்களும் வாழ்வில் முன்னேற உரிய அறிவுரைகளை வழங்க வேண்டும். இவ்வாறு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் செஞ்சி கே.எஸ்.மஸ்தான் பேசினார்.

இந்நிகழ்ச்சிகளில் தருமபுரி நாடாளுமன்ற உறுப்பினர் மரு.டி.என்.வி.எஸ். செந்தில்குமார், தருமபுரி சட்டமன்ற உறுப்பினர் எஸ்.பி.வெங்கடேஷ்வரன், முன்னாள் அமைச்சர் முனைவர். பழனியப்பன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் தடங்கம் பெ. சுப்பிரமணி, கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) கௌரவ் குமார், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை செயற்பொறியாளர் பாலகிருஷ்ணன், வட்டார வளர்ச்சி அலுவலர் சுருளிநாதன் உட்பட துறைசார் அலுவலர்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.




சேலம் நகர தி.மு.க சார்பில் முதல்வர் பிறந்தநாள் விழா நிதி நிலை அறிக்கை விளக்க பொதுக்கூட்டம் நகர செயலாளர் வேல்முருகன் தலைமையில் நடைபெற்றது. கிழக்கு மாவட்ட செயலாளர் எஸ்.ஆர். சிவலிங்கம், தக்கோலம் தேவபாலன் ஆகியோர் சிறப்புரையாற்றினர். இதில் சுரேஷ்குமார், சின்னதுரை, முரா.கருணாநிதி, ஏ.ஏ.ஆறுமுகம், முனைவர் அ.சீனிவாசன், தனசேகரன், சிவராமன், ஜோதி, மணிபாரதி, சோமசுந்தரம், முத்துலிங்கம், சந்திரமோகன், மனோகரன், மலர் விழி ராஜா , சங்கர், விஜயகுமார், ரத்தினவேல் , மாதேஸ்வரன், டாக்டர் செழியன், மூர்த்தி, சிவராமன், மருதமுத்து, சித்தார்த்தன், பாலமுருகன், மணி, பாலசுப்ரமணியம், அலெக்சாண்டர், ராமசாமி, இளவரசு, பரமசிவம், பிரகாஷ், சாந்தி, விஜயகுமார், சுப்பிரமணி, சுகுணா,புஷ்பாவின் , செல்வம், அன்னக்கிளி, மீரா தேவி, செல்வகுமார், ராமதாஸ், வெங்கடேஷ், அசோகன், ரவி ,புலித்தேவன், கமலக்கண்ணன், கண்ணன், மணிவண்ணன் ,ரமேஷ், மாரிமுத்து, சத்தியன், நடேசன், மணிமாறன், சங்கர் ,ஸ்டாலின், வரதராஜ் ,ஞானசேகர் ,செல்வகுமார், காங்கமுத்து, செல்வம், பாபு , வெங்கடேஷ் மற்றும் பலர் உள்ளனர்.

### மாவட்டக் கழகச் செயலாளர் வசந்தம் கார்த்திகேயன் தலைமையில்

# திராவிடமாடல் நாயகர் முதல்வர் பிறந்தநாள் - நிதிநிலை அறிக்கை விளக்கப் பொதுக்கூட்டம்!

### நெல்லிக்குப்பம் புகழேந்தி சிறப்புரையாற்றினார்!

கள்ளக்குறிச்சி மார்ச் 7.

கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்டம் கள்ளக்குறிச்சி நகர தி.மு.க. சார்பில் எல்லோருக்கும் எல்லாம் திராவிட மாடல் நாயகர்,தமிழக முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் 71வது பிறந்த நாள் விழா மற்றும் நிதி நிலை அறிக்கை விளக்க பொதுக்கூட்டம் 04.03.2024 திங்கள் கிழமை அன்று மாலை 6 மணி அளவில் கலைஞர் திடல் மந்த வெளியில் நடைபெற்றது.

இக்கூட்டத்திற்கு கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர், ரிஷிவந்தியம் சட்டமன்ற உறுப்பினர் வசந்தம் கார்த்திகேயன் தலைமை தாங்கினார்.

கள்ளக்குறிச்சி நகரச் செயலாளரும்,நகர மன்ற தலைவருமான ஆர்.சுப்ராயலு வரவேற்புரையாற்றினார்.மேலும் தெற்கு மாவட்ட நிர்வாகிகள்,நகர நிர்வாகிகள்,கழக முன்னோடிகள்,பிறஅணி நிர்வாகிகள் முன்னிலை வகித்தனர்,

இக்கூட்டத்தில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்,கழக கொள்கை பரப்பு இணை செயலாளர்,தமிழ்நாடு தோல் பொருட்கள் உற்பத்தி மற்றும் பதனிடுதல் தொழிலாளர் நலவாரிய தலைவர் நெல்லிக்குப்பம்புகழேந்தி,மேனாள் சட்டத்துறை இணை அமைச்சர் சு.வேங்கடபதி, மாநில விவசாய அணி துணைச் செயலாளர் தங்க. சித்தார்த்தன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்கள்.

இதில் வசந்தம் கார்த்திகேயன் எம்.எல்.ஏ பேசுகையில் வருகின்ற நாடாளுமன்றத் தேர்தலில் தமிழக முதலமைச்சரும் நமது கழக தலைவருமான மு.க. ஸ்டாலின் அவர்கள் அறிவிக்கும் வேட்பாளர்கள் 40 தொகுதிகளிலும் வெற்றி பெறுவது உறுதி, அந்த வகையில் பொதுமக்கள் மத்தியில் நல்ல வரவேற்பு உள்ளது,இதில் கள்ளக்குறிச்சி நாடாளுமன்ற தொகுதியில் திமுக அல்லது கூட்டணி கட்சி வேட்பாளர் அதிக வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெறுவார்,இந்த தொகுதியில் திமுக வேட்பாளர் அல்லது கூட்டணி கட்சி வேட்பாளர் தலைமை யாரை நிற்க வைத்தாலும் அந்த வேட்பாளரை நமது கழகத் தொண்டர்கள் நிர்வாகிகள் மூத்த முன்னோடிகள் அனைவரும் அயராது பணி பட்டு தமிழகத்திலே இந்த கள்ளக்குறிச்சி தொகுதி தான் அதிக வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது என்று நிலையை நாம் உருவாக்க வேண்டும் என்று பொதுக்கூட்டத்தில் தொண்டர்களிடையே எடுத்துரைத்து பேசினார்.

இதில் வி.என்.பழனியப்பன், வி.ஆர்.டி.தங்கராஜ்,ரா.நல்லமுத்து,ஆர்.ஜி. சடையன், எஸ்.லியாகத் அலி, Dr.இளங்கோவன்,ஏ.கே.ரமேஷ்,ஏ.எஸ்.ஷர்புதீன்,ஆர்.கோகுல்தாஸ், ஆர்.சண்முகம், Dr.பி.கோபி,ஜி.பி.ஆனந்த், கே.பி.தனலட்சுமி, டி. கார்த்திகேயன்,கே.குமார், அன்சர் அலி, தங்க.சி.விஜயகுமார், எம்.சீனிவாசன், விமலா விஜய் மனோஜ், சு.மதி குணசேகரன், ரோஜா ஸ்ரீ, சந்தியா,தவமணி, இன்பராஜ், சி.எம். ராஜேந்திரன், கே.அப்துல் கரீம்,கே.அப்துல் ரசாக்,நிதி. அன்பு, வி.உமா வெங்கடேசன், எஸ்.தட்சிணாமூர்த்தி, விஜயலட்சுமி செல்வராஜ்,எஸ்.சதீஷ்குமார்,ஏ. செந்தில்குமார், பி.எஸ். கண்ணன் ஏ.பி.ஆர்யகுமார் உள்ளிட்ட மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர்,கிளை கழக நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக சார்பு அணிகளின் நிர்வாகிகள், கழக முன்னோடிகள், முன்னாள் நிர்வாகிகள் வார்டு நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

முடிவில் ஒன்றிய கழக செயலாளர் கள்ளக்குறிச்சி தெற்கு ஒன்றியம் சி.வெங்கடாசலம் நன்றி கூறினார்.

### மதச் சார்பற்ற ஜனநாயக சக்திகள்

# ஒன்றிய அரசை கைப்பற்றுகிற காலம் வெகுதொலைவில் இல்லை!

### தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் கு.செல்வப் பெருந்தகை அறிக்கை!

சென்னை, மார்ச் 7 -

தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவர் கு. செல்வப்பெருந்தகை எம்.எல்.ஏ. விடுத்துள்ள அறிக்கை (5.3.2024) வருமாறு:



இந்தியாவிலேயே தமிழகத்தில் தி.மு.க. தலைமையிலான மதச்சார்பற்ற கூட்டணி வலிமை பெற்றிருப்பதால் கடந்த தேர்தல்களில் பா.ஜ.க. வெற்றி என்பது கானல் நீராகிவிட்டதை அறிந்த பிரதமர் மோடி அடிக்கடி தமிழக சுற்றுப்பயணத்தை மேற்கொண்டு வருகிறார். தமிழகத்திற்கு வரும் போதெல்லாம் கோபம் கொப்பளிக்கிறது, பதற்றம் அதிகரிக்கிறது.

மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட தமிழக அரசுக்கு எதிராக பிரதமர் பதவியில் இருக்கிறோம் என்கிற குறைந்தபட்ச நாகரிகம் கூட இல்லாமல் அவதூறு குற்றச்சாட்டுகளை கூறி வருகிறார். தேர்தலின் போது கொடுத்த எந்த வாக்குறுதியையும் நிறைவேற்றுவதை மூடி மறைக்கின்ற வகையில் அவரது உரை அமைந்திருந்திருக்கிறது.

**மோடி ஆட்சியில் எல்லாம் தலைகீழ்!**

தமிழகத்தில் பா.ஜ.க. தலைமையிலான கூட்டணியில் சாம, பேத, தான, தண்டங்களைப் பயன்படுத்தியும் சர்வ அதிகாரம் படைத்த பிரதமர் மோடியோடு மேடையில் அமர ஒருநபர் கட்சிகளைத் தவிர,எந்த அரசியல் கட்சித் தலைவர்களும் முன்வரவில்லை. இதனால் ஆத்திரமடைந்த பிரதமர் மோடி, தி.மு.க., காங்கிரஸ் மீது கடுமையான குற்றச்சாட்டு களைக் கூறியிருக்கிறார்.

இந்தியாவை உலகின் மூன்றாவது தலைசிறந்த பொருளாதார நாடுகளில் ஒன்றாக மிக விரைவில் ஆக்க வேண்டுமென்று 10 ஆண்டு ஆட்சிக் காலம் முடிந்து தேர்தலை எதிர் நோக்கும் போது கூறு கிறார். கடந்த 2019 சுதந்திரதின விழாவில் உரையாற்றிய மோடி, 2024 இல் 5 டிரில்லியன் டாலராக உயர்ந்து உலகில் மூன்றாவது பொருளாதார நாடாக இந்தியாவை உயர்த்துவேன் என்று கூறினார். தற்போது அந்த இலக்கை 2025 ஆம் ஆண்டுக்கு தள்ளி வைத்திருக்கிறார்.

மோடியின் ஒன்பதரை ஆண்டு ஆட்சிக் காலத்தில் சராசரி வளர்ச்சி விகிதம் 6 சதவிகிதத்திற்கும் குறைவாக இருக்கிற போது 5 டிரில்லியன் பொருளாதாரத்தை எப்போது அடையப் போகிறார் என்று பொருளாதார நிபுணர்கள் விமர்சனம் செய்திருக்கிறார்கள். அந்த வளர்ச்சியை அடைய வேண்டுமானால் இருமடங்கு வளர்ச்சி விகிதத்தை நாடு அடைய வேண்டும்.

மொத்த உள்நாட்டு உற்பத்தியைப் பற்றிப் பேசுகிற பிரதமர் மோடி தனிநபர் வருமானம் ரூபாய் 1 லட்சத்து 72 ஆயிரமாகக் குறைந்திருப்பது குறித்து பேசுவதில்லை. அதேபோல, கடந்த ஒன்பதரை ஆண்டுகளில் 117 லட்சம் கோடி ரூபாய் கடன் சுமையும், உலக பசி குறியீட்டின்படி 125 நாடுகளின் வரிசையில் இந்தியா 111வது இடத்தில் இருக்கிறது.

ஆனால், இலங்கை 60வது இடத்திலும், பாகிஸ்தான் 102வது இடத்திலும் இருப்பதை விட இந்தியாவிற்கு வேறு அவமானம் இருக்க முடியாது.

**வேலையில்லாத் திண்டாட்டம்!**

அதேபோல, வேலையில்லா திண்டாட்டம் 45 ஆண்டுகளில் இல்லாத அளவிற்கு 20 முதல் 24 வயது நிரம்பிய பட்டதாரிகளிடையே 44.5 சதவிகிதமும், 25 முதல் 29 வயதுள்ளவர்களிடையே 14.33 சதவிகிதமும் என உள்ளது. கடந்த ஆண்டு ரயில்வே துறையில் 90,000 கீழ்நிலை பணியாளர்களுக்கு நடந்த தேர்வில் 2 கோடியே 80 லட்சம் பேர் பங்கெடுத்திருக்கிறார்கள். வேலையில்லா திண்டாட்டத்திற்கு இதை விட வேறு சான்று தேவையில்லை.

தி.மு.க. அரசு வெள்ள மேலாண்மையை சரிவரச் செய்யவில்லை, துயரத்தில் பங்கெடுத்துக் கொள்ளவில்லை என்று மோடி குற்றம் சாட்டியிருக்கிறார். தேசிய பேரிடர் நிவாரண நிதியிலிருந்து ரூபாய் 37 ஆயிரம் கோடி நிதி கேட்டு நாடாளுமன்ற உறுப்பினர்கள் உள்துறை அமைச்சர் அமித்ஷாவை சந்தித்து முறையிட்டனர். ஜனவரி 27 ஆம் தேதிக்கு நிவாரணம் வழங்கப்படும் என்று உறுதி கூறினார். ஆனால் தமிழகத்திற்காக நீலிக்கண்ணீர் வடிக்கும் பிரதமர் மோடி இது வரை ஒரு சல்லிக் காசு கூட வழங்கவில்லை.

ஒன்றிய அரசின் வளர்ச்சித் திட்டங்களில் பல லட்சம் கோடி ரூபாய் கொள்ளை அடிப்பதை அனுமதிக்க மாட்டேன் என்று உரத்தக் குரலில் கூறியிருக்கிறார். ஆனால், ஒன்றிய பா.ஜ.க. ஆட்சியில் நெடுஞ்சாலைத் துறை நிறைவேற்றிய திட்டங்களை ஆய்வு செய்து மத்திய கணக்கு தணிக்கை அதிகாரி நடைபெற்ற முறைகேடுகள் குறித்து அம்பலப்படுத்தியிருக்கிறார்.

**கொள்ளையோ, கொள்ளை!**

நெடுஞ்சாலைத்துறை திட்டத்தில் ரூபாய் 7.5 லட்சம் கோடி முறைகேடுகள் நடந்திருப்பதாக ஆதாரப்பூர்வமாக அறிக்கை வெளியிடப்பட்டிருக்கிறது. துவாரகா நெடுஞ்சாலை வரைவு திட்டத்தில் ஒரு கி.மீ. தூரத்திற்கு அனுமதிக்கப்பட்ட தொகை ரூபாய் 18 கோடி. ஆனால், இறுதியில் செலவானதோ ரூபாய் 250 கோடி. திட்ட மதிப்பை விட 278 மடங்கு கூடுதல் செலவு ஆகியுள்ளது. இதனால் பயனடைந்தவர்கள் யார் ?

நாடு முழுவதும் 650 சுங்கச்சாவடிகள் உள்ளன. இதில் 5 சுங்கச்சாவடிகளை மட்டும் சி.ஏ.ஜி. ஆய்வு செய்து அதில் விதிகளுக்குப் புறம்பாக ரூபாய் 132 கோடியை தேசிய நெடுஞ்சாலை ஆணையம் வாகன ஓட்டிகளிடம் அதிகமாக வசூல் செய்ததாக சி.ஏ.ஜி. குற்றச்சாட்டு கூறியுள்ளது. இதில் தமிழ்நாட்டில் பரனூர் சுங்கச்சாவடியில் சி.ஏ.ஜி. ஆய்வு செய்ததில் ரூபாய் 6.5 கோடி அளவுக்கு முறைகேடுகள் நடந்துள்ளதாக கூறியிருக்கிறது. நாட்டிலுள்ள 650 சுங்கச்சாவடிகளையும் சி.ஏ.ஜி. ஆய்வு செய்தால் எத்தனை ஆயிரம் கோடி ரூபாய் முறைகேடுகள், ஊழல்கள் நடந்திருக்குமோ என்ற பேரதிர்ச்சி ஏற்படுகிறது.

அன்று 2ஜி குற்றச்சாட்டில் ரூபாய் 1 லட்சத்து 76 ஆயிரம் கோடி வருவாய் இழப்பு ஏற்பட்டதாக சி.ஏ.ஜி கூறியதை வைத்து இரண்டு தேர்தல்களில் அவதூறு பிரச்சாரம் மேற்கொள்ளப்பட்டது. அதற்காக தொடுக்கப்பட்ட வழக்கில் குற்றம்சாட்டப்பட்டவர்கள் நிரபராதி என சி.பி.ஐ. நீதிமன்றம் தீர்ப்பளித்தது. ஆனால், 7.5 லட்சம் கோடி முறைகேடுகள் குறித்து இது வரை எந்த விசாரணையோ, வழக்கு தொடுப்பதற்கான முகாந்திரமோ மோடி ஆட்சியில் இல்லை. உலகம் போற்றும் உத்தமர் மோடி என்று சுய தம்பட்டம் அடித்துக் கொள்கிறார்கள். உத்தமர் ஆட்சியில் ஊழல் எவ்வளவு தலைவிரித்தாடுகிறது என்பதற்கு இதைவிட வேறு சான்று தேவையில்லை.

**தகுதியில்லாத மோடி!**

காங்கிரஸ் கட்சி குடும்ப அரசியல் நடத்துவதாக மோடி கூறுகிறார். விடுதலை போராட்ட காலத்தில் மோதிலால் நேரு, ஜவஹர்லால் நேரு உள்ளிட்ட குடும்பத்தினர் அனைவருமே ஒரு கட்டத்தில் சிறையிலிருந்து விடுதலைக்காகப் போராடினார்கள். விடுதலைக்காக ஒரு துரும்பைக் கூட எடுத்துப் போடாத பாரம்பரியத்தில் வந்த பிரதமர் மோடி விடுதலைக்காக காந்தியடிகள் தலைமையில் 60 ஆண்டுகள் போராடிய காங்கிரஸ் பேரியக்கம் குறித்துப் பேசுவதற்கு எந்த தகுதியும் இல்லை.

எந்த ஆர்.எஸ்.எஸ். இயக்கத்தால் மோடி வளர்க்கப்பட்டாரோ, அதனுடைய தலைமை நிலையத்தில் 52 ஆண்டுகள் தேசியக் கொடியை ஏற்றாத தேசவிரோத இயக்கத்தால் வளர்க்கப்பட்டவர் தான் மோடி. இந்தப் பின்னணியில் உள்ள மோடி, காங்கிரஸ் கட்சிக்கு உபதேசம் செய்ய எந்த உரிமையும் இல்லை.

2024 மக்களவை தேர்தலில் மோடி ஆட்சியை அகற்ற தமிழ்நாடு உள்ளிட்ட அனைத்து மாநிலங்களிலும் இந்தியா கூட்டணி அணி திரண்டு நிற்கிறது. மக்கள் விரோத மோடி ஆட்சியை அகற்ற தலைவர் ராகுல் காந்தி தம்மை வருத்தி நடைப்பயணம் மேற்கொண்டு மக்களோடு மக்களாக அவர்களது துயரங்களைப் பகிர்ந்து கொண்டு மாபெரும் பரப்புரையை மேற்கொண்டு வருகிறார். அவரது உழைப்பிற்குப் பலன் தருகிற வகையில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டு மீண்டும் மதச்சார்பற்ற ஜனநாயக சக்திகள் ஒன்றிய ஆட்சியைக் கைப்பற்றுகிற காலம் வெகு தொலைவில் இல்லை.

இவ்வாறு அவர் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.



புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி ஊராட்சி ஒன்றியம், திருநாளூரில், ஊராட்சி ஒன்றியக்குழு உறுப்பினர் நிதியிலிருந்து, ரூ.9.99 இலட்சம் மதிப்பீட்டில் புதிதாகக் கட்டப்பட்டுள்ள 30,000 லிட்டர் கொள்ளளவுடைய மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டியினை, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் நேற்று முன்தினம் (05.03.2024) திறந்து வைத்தார். உடன் அறந்தாங்கி வருவாய் கோட்டாட்சியர்.ச.சிவக்குமார், அறந்தாங்கி ஒன்றியக்குழுத் தலைவர் திருமதி.மகேஸ்வரி சண்முகநாதன், ஒன்றியக் குழு உறுப்பினர் திருமதி.சுமதி மெய்யநாதன், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.